www.Padasalai.Net

ORIGINAL
# IDEAL
Published since 1978 with Repute

# சமூக அறிவியல்

## 10

**10 அரசு வினாத்தாள்கள் - முழு விடைகளுடன்**

**PTA வினாத்தாள்கள் - முழு விடைகளுடன் - 6**

**அரசு பொதுத்தேர்வு வினாத்தாள்கள் - முழு விடைகளுடன் - 4**

ஆசிரியர்

**ம. முனீஸ்வரன்,** M.A., B.Ed.,
சமூக அறிவியல் பிரியன், தேவகோட்டை.

**SRI GANGA PUBLICATIONS**®
(A unit of **Shyamala** Group)

No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627 001.**

Phone : 0462 - 2338899, 2338484.
Mobile : 94431-58484,
94425-58484,
89032-58484

E-mail: suryaguides@yahoo.com
website : www.suryapublications.in

விலை: ₹ 80/-

www.Padasalai.Net

## Online Shopping

| | | |
|---|---|---|
| PhonePe No. | : | 94431-58484 |
| G.Pay No. | : | 94425-58484 |
| Pay TM No. | : | 94431-58484 |

## OUR BANK DETAILS

| | | |
|---|---|---|
| Account Name | : | SURYA PUBLICATIONS |
| Account Number | : | 446971431 |
| Bank Name | : | INDIAN BANK |
| IFSC Code | : | IDIB000T034 |
| Branch Name | : | TIRUNELVELI JUNCTION |
| Account Name | : | SURYA PUBLICATIONS |
| Account Number | : | 510909010051752 |
| Bank Name | : | CITY UNION BANK |
| IFSC Code | : | CIUB0000230 |
| Branch Name | : | PALAYAMKOTTAI |
| Account Name | : | SRI GANGA PUBLICATION |
| Account Number | : | 928507483 |
| Bank Name | : | INDIAN BANK |
| IFSC Code | : | IDIB000T034 |
| Branch Name | : | TIRUNELVELI JUNCTION |

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

Printed at: Sri Shyamala Printers, Tirunelveli
Marketed by: SURYA Publications & GANGA Publications.

www.Padasalai.Net

வினாத்தாள் 1

# PTA மாதிரி வினாத்தாள் - 1

வகுப்பு: X

## சமூக அறிவியல்

கால அளவு: 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 100

**அறிவுரைகள் :** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு: i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14×1=14

ii) **கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1. (i) முதல் உலகப்போரின்போது ஆஸ்திரியாவை தெற்குமுனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக் கடமையாக இருந்தது.**

**(ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.**

**(iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச்சந்தை வீழ்ச்சி 1929-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் நாளில் ஏற்பட்டது.**

**(iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966-இல் விலக்கிக்கொள்ளப்பட்டது.**

அ) (i) மற்றும் (ii) சரி ஆ) (iii) மட்டும் சரி

இ) (iii) மற்றும் (iv) சரி ஈ) (i), (ii) மற்றும் (iii) சரி

**2. வம்போவா இராணுவக் கழகத்தின் முதல் இயக்குனர் யார்?**

அ) சன்யாட் சென் ஆ) ஷியாங்கே-ஷேக்

இ) மைக்கேல் பொரோடின் ஈ) சூ-யென்-லாய்

**3. கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணத்திற்கான சரியான விடையை அடையாளம் காண்க.**

**கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857-ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.**

**காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.**

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.

ஆ) கூற்று தவறு காரணம் சரி.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

**4. முதலாவது வனச்சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?**

அ) 1858 ஆ) 1811 இ) 1865 ஈ) 1936

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

5. **1812-ஆம் ஆண்டு பெயரிடப்பட்ட தொடக்ககால தமிழ் இலக்கிய நூல் எது?**
அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) வீரசோழியம் ஈ) சூளாமணி

6. **பழவேற்காடு ஏரி .......... மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.**
அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
இ) ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

7. **கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணத்திற்கான சரியான விடையை அடையாளம் காண்க.**
**கூற்று : இமயமலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.**
**காரணம் : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.**
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு.
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

8. **பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.**
அ) வெள்ளப்பெருக்கு கால்வாய்கள் ஆ) வற்றாத கால்வாய்கள்
இ) ஏரிகள் ஈ) கால்வாய்கள்

9. **இந்தியாவில் முதல் சணல் ஆலை நிறுவப்பட்ட இடம்**
அ) கொல்கத்தா ஆ) மும்பை இ) அகமதாபாத் ஈ) பரோடா

10. **தமிழ்நாட்டில் மிக அதிக மழைபெறும் பகுதி**
அ) களக்காடு ஆ) ஒகேனக்கல் இ) சின்னகல்லார் ஈ) கிள்ளியூர்

11. **அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக எதற்குப் பொறுப்புடையவர்கள் ஆவர்?**
அ) குடியரசுத் தலைவர் ஆ) மக்களவை
இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை

12. **பஞ்சசீலக் கொள்கை கையெழுத்தானது**
அ) நேரு மற்றும் சூ-யென்-லாய் ஆ) நேரு மற்றம் நாசர்
இ) நேரு மற்றும் சுகர்னோ ஈ) நேரு மற்றும் நிக்ரூமா

13. **உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?**
அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர்
இ) துணை தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் ஏதுமில்லை

14. **மாறுபட்ட ஒன்றினைக் கண்டுபிடி.**
அ) வருமான வரி ஆ) சொத்து வரி
இ) நிறுவன வரி ஈ) பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி

## பகுதி - II

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10×2=20**
**ii) 28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15. முதல் உலகப்போருக்குப் பிந்தைய காலத்தைச் சேர்ந்த மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

16. ‘பெர்லின் சுவர்‘ – சிறுகுறிப்பு வரைக.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

17. முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?
18. தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. "ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் என்ன?
20. 'மண்' - வரையறு.
21. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
22. கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது?
23. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
24. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை - சிறுகுறிப்பு வரைக.
25. வெளியுறவு கொள்கை என்றால் என்ன?
26. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.
27. சென்னை "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுவது ஏன்?
28. மக்கள் தொகை சீரற்று இருப்பதற்கான சமூக-பொருளாதார காரணங்கள் யாவை?

## பகுதி - III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **10×5=50**
**ii) 42வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:
 (i) லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு ------.
 (ii) ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ------ ஆகும்.
 (iii) உலகிலேயே மிக நீளமான அணை ------.
 (iv) தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ------.
 (v) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ------ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
30. அ) வேறுபடுத்துக.
 (i) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
 (ii) நீர்வழிப் போக்குவரத்து மற்றும் வான்வழிப் போக்குவரத்து.
 ஆ) காரணம் கூறுக: வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.
31. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.
32. வேலூர் புரட்சிக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?
33. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் குறித்து நீவிர் அறிவது யாது?
34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
35. ஏதேனும் இரண்டு பல்நோக்குத் திட்டங்கள் பற்றி எழுதுக.
36. மனிதனால் உருவாகும் பேரிடர்களுக்கான காரணங்களையும், தணிக்கும் முறைகளையும் விவரி.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. மேற்கு ஆசியா இந்தியாவிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக உள்ளது-நிரூபி.
39. நாட்டு வருமானமானது கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் என்ன?
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
 1900 முதல் 1920 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
(i) சான்பிரான்சிஸ்கோ (ii) பிரான்ஸ் (iii) கிரேட் பிரிட்டன் (iv) மொராக்கோ (v) இத்தாலி

**பகுதி - IV**

**குறிப்பு: i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2×8=16

43. தன்னாட்சி (ஹோம்ரூல்) இயக்கத்தைத் தொடங்கியதன்மூலம் திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் இந்திய சுதந்திரப் போராட்டத்தை 1916-ஆம் ஆண்டுக்குப்பின் எவ்வாறு தக்கவைத்தார்? **(அல்லது)**
i) தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
ii) சமூக சீர்திருத்தத்திற்கு ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் பங்களிப்புகளைக் குறிப்பிடுக.

44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**
i) காரகோரம் மலைத்தொடர் ii) சிந்து நதி iii) மாளவ பீடபூமி iv) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை v) கோசி பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு திட்டம் vi) காபி விளையும் பகுதி vii) மசூலிப்பட்டினம் viii) அந்தமான் நிக்கோபார் தீவுகள் **(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**
i) கன்னியாகுமரி ii) தொட்டபெட்டா iii) சோழ மண்டல கடற்கரை iv) மன்னார் வளைகுடா v) வைகை ஆறு vi) வண்டல மண் பகுதி vii) தேயிலை விளையும் பகுதி viii) பாபநாசம் அணை.

★★★

**விடைகள்** **வினாத்தாள் - 1**

## PTA மாதிரி வினாத்தாள் - 1

**பகுதி - I**

1. ஈ) (i) (ii) மற்றும் (iii) சரி
2. ஆ) ஷியாங்கே-ஷேக்
3. ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
4. இ) 1865
5. அ) திருக்குறள்
6. ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம்
7. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. கூற்றுக்கான காரணம் சரி.
8. இ) ஏரிகள்
9. அ) கொல்கத்தா
10. இ) சின்ன கல்லார்
11. ஆ) மக்களவை
12. அ) நேரு மற்றும் சூ-யென்-லாய்
13. ஆ) தலைமைய இயக்குநர்
14. ஈ) பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி

**பகுதி - II**

15. **முதல் உலகப்போருக்குப் பிந்தைய முக்கிய மூன்று சர்வாதிகாரிகள்:**
ஜெர்மனி - ஹிட்லர்; இத்தாலி - முசோலினி; ஸ்பெயின் - பிராங்கோ.

16. **பெர்லின் சுவர்:**
- இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஜெர்மனி இரண்டாக பிரிக்கப்பட்டது.
- அப்போது பெர்லின் நகர் பிரிக்கப்பட்டு சுவர் எழுப்பப்பட்டது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- சுவரின் கிழக்கு பக்கம் கிழக்கு ஜெர்மனி – மேற்கு பக்கம் மேற்கு ஜெர்மனி.
- 1989 இல் பெர்லின் சுவர் உடைக்கப்பட்டு ஒன்றாக இணைந்தது.

17. **முழுமையான சுயராஜ்யம்:**
    - 1929 – டிசம்பர் மாதம் லாகூரில் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது.
    - இந்த அமர்வில் முழுமையான சுதந்திரம் வேண்டி இலக்கு, வன்முறையற்ற முறையில் முழுமையான சுதந்திரம் அடைவது என தீர்மானித்தனர்.
    - இதுவே முழுமையான சுயராஜ்ஜியம் எனப்பட்டது.

18. **தென்னிந்திய நல உரிமை சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்:**
    தமிழில் – திரவிடன்; ஆங்கிலத்தில் – ஜஸ்டிஸ்; தெலுங்கில் – ஆந்திரபிரகாசிகா.

19. **ஜெட் காற்றோட்டங்கள்:**
    வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகளே 'ஜெட் காற்றோட்டங்கள்' எனப்படும்.

20. **மண் – வரையறை:**
    - புவியின் மேற்பரப்பில் காணப்படும் நுண்ணிய துகள்களே மண்.
    - பல்வேறு காலநிலை சூழலில் பாறைகள் சிதைவடைவதால் மண் உருவாகின்றது.
    - கனிமங்களின் கூட்டுப்பொருள்கள், முக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருட்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை கொண்டது.
    - இது புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

21. **நிலக்கரியின் வகைகள் மற்றும் கரிம அளவுகள்:**
    - ஆந்திரசைட் – 80 முதல் 90%
    - பழுப்பு நிலக்கரி – 40 முதல் 60%
    - பிட்டுமினஸ் – 60 முதல் 80%
    - மரக்கரி – 40% குறைவு

22. **கடற்கரைச் சமவெளிகள் உருவாகும் விதம்:**
    - கடற்கரைச் சமவெளிகள் என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகள் பெரிய அளவில் வண்டல் படிவுகளை படிய வைப்பதால் கடற்கரை சமவெளிகள் உருவாகின்றது.
    - இது வளமான வண்டல் மண் கொண்ட சமவெளியாகும்.

23. **இந்திய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் முறை:**
    - மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.
    - குடியரசுத்தலைவர் ஒற்றை மாற்றுவாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

24. **கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை:**
    மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினைச் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

25. **வெளியுறவுக் கொள்கை:**
    - ஒரு நாடு தனது வெளியுறவு விவகாரங்களில் தனது தேசிய நலன்களைப் பாதுகாத்து மேம்படுத்துதல்.
    - இரு தரப்பு மற்றும் பலதரப்பு நாடுகளுடன் உறவுகளை அமைதியான முறையில் செயல்படுத்த வடிவமைக்கப்பட்ட கொள்கையே வெளியுறவுக் கொள்கை எனப்படும்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

26. **உலகமயமாக்கலின் வகைகள்:**
- தொன்மையான உலகமயமாக்கல்
- இடைப்பட்ட உலகமயமாக்கல்
- நவீன உலகமயமாக்கல்

25. **சென்னை ஆசியாவின் 'டெட்ராய்ட்':**
சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நான்கு சக்கர வாகன தொழிற்சாலை அதிகம் இருப்பதால் சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுகிறது.

28. **மக்கள் தொகை சீரற்று இருப்பதற்கான சமூக-பொருளாதாரக் காரணங்கள்:**
- புவியியல் காரணிகள்
- பொருளியல் காரணிகள்
- சமூகக் காரணிகள்
- வரலாற்றுக் காரணிகள்

**பகுதி - III**

29. i) 1925 ii) சம மழைக் கோடுகள் iii) ஹிராகுட் அணை iv) பாத்திமா பீவி
v) ஜூலை 1, 2017

30. அ) i) **மேற்கு தொடர்ச்சி மலைகள் - கிழக்கு தொடர்ச்சி மலைகள்**

| எண் | மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| 1. | மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. |
| 2. | பரவல்: நீலகிரி முதல் கன்னியாகுமரி. | பரவல்: தமிழகத்தின் வட மாவட்டங்கள். |
| 3. | தொடர்ச்சியான மலைகள். | தொடர்ச்சியற்ற மலைகள். |
| 4. | பாலக்காட்டு கணவாய் உள்ளது. | கணவாய் இல்லை. |
| 5. | வடபகுதி சாயத்ரி என்று அழைக்கப்படுகிறது. | இம்மலைத்தொடர் பூர்வாத்ரி என்றும் அழைக்கப்படும். |

ii) **நீர் வழி போக்குவரத்து - வான் வழி போக்குவரத்து**

| எண் | நீர் வழி போக்குவரத்து | வான் வழி போக்குவரத்து |
|---|---|---|
| 1. | இது பழமையான மற்றும் விலை மலிவான போக்குவரத்து ஆகும். | நவீன கால மற்றும் விலை அதிகமான போக்குவரத்து ஆகும். |
| 2. | கனமான மற்றும் அதிக அளவு சரக்குகளை கொண்டு செல்கிறது. | கனமற்ற மற்றும் குறைந்த அளவு சரக்குகளை கொண்டு செல்கிறது. |
| 3. | குறைவான எரிபொருள் செலவினம் கொண்ட போக்குவரத்து ஆகும். | அதிகமான எரிபொருள் செலவினம் கொண்ட போக்குவரத்து ஆகும். |

ஆ) **காரணம்:**
- இந்தியாவில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பும், நாட்டின் மொத்த வருமானத்தில் 25 சதவீதமும் இந்தியாவில் வேளாண்மை அளிக்கிறது.
- வேளாண்மை சார்ந்த உபதொழிலில் பெரும்பாலான மக்கள் ஈடுபடுவதால் வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு என அழைக்கப்படுகிறது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

31. **முதல் உலகப்போருக்கான முக்கிய காரணம்**

**ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கை - எதிர் அணிசேர்க்கை:**

- கி.பி.1900-களில் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
- ஒரு முகாம் மையநாடுகள் - ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி.
- இவை 1882-இல் மூவர் உடன்படிக்கை மேற்கொண்டது.
- ரஷ்யாவுடன் இங்கிலாந்து ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன் விளைவாக இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட 'மூவர் கூட்டு' உருவாக்கப்பட்டது.

**வன்முறை சார்ந்த தேசியம்:**

- தேசப்பற்றின் வளர்ச்சியோடு 'எனது நாடு சரியோ, தவறோ நான் அதை ஆதரிப்பேன்' என்ற மனப்பாங்கு வளர்ந்தது.
- இங்கிலாந்தின் - ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்சின் - அதிதீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகியவை தீவிர போர் வெடிப்பிற்கு வழி வகுத்தது.

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

- ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் இரக்கமற்ற தன்முனைப்பு கொண்டவராகவும், ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தார்.
- இங்கிலாந்து, கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் மேலும் அதிகரித்தது.

**பிரான்சு - ஜெர்மனி பகை:**

- பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்கள்.
- 1871 போரில் பிரான்சு, ஜெர்மனியிடம் தோல்வியுற்று தனது அல்சேஸ், லொரைன் பகுதிகளை இழக்க நேரிட்டது.
- மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு பிரான்சிற்கு கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

**பால்கன் பகுதி ஏகாதிபத்திய அரசியல் அதிகார வாய்ப்பு:**

- 1908-இல் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியில் இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.
- ஆஸ்திரியா செர்பியாவின் மீது படையெடுக்கும் போது, செர்பியாவிற்கு ரஷ்யா உதவுமானால் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக களமிறங்குவேன் என ஜெர்மனி அறிவித்தது.

**பால்கன் போர்கள்:**

- பால்கன் நாடுகள் துருக்கி பலவீனம் அடைந்ததைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக தங்களை விடுவித்துக் கொண்டது.
- மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர பால்கன் நாடுகளான கீரிஸ், செர்பியா, பல்கேரியா, மாண்டிநீக்ரோ இடையே போட்டி ஏற்பட்டது.
- 1913-இல் இலண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா நாடு உருவாக்கப்பட்டது.
- 1913 ஆகஸ்ட் மாதம் கையெழுத்திட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையின்படி இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**உடனடிக் காரணம்:**

- பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ நகரில் 1914 ஜூன் 28 ஆம் நாள் ஆஸ்திரிய இளவரசர் பிரான்சிஸ் பெர்டினாண்டு செர்பிய இளைஞனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- ஆஸ்திரியா இந்நிகழ்வை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாகக் கருதியது.
- செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்ற வதந்தி நிலவ ஜெர்மனி, ரஷ்யா மீது போர் தொடுக்க முதல் உலகப்போர் தொடங்கியது.

32. **வேலூர் புரட்சி காரணங்கள் மற்றும் விளைவுகள்:**

**காரணங்கள்:**

- இந்திய வீரர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்பட்டது.
- சாதி மற்றும் சமய அடையாளங்களை அணிவதில் கட்டுப்பாடு.
- புதிய தலைப்பாகை முறை அறிமுகம்.
- இந்தியர்களுக்கு பதவி உயர் மறுக்கப்பட்டது.
- இந்திய வீரர்கள் இழிவாக நடத்தப்பட்டது.
- சர். ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகள்.

**விளைவுகள்:**

- போருக்கு காரணமானவர்கள் கொல்லப்பட்டனர்.
- திப்புவின் புதல்வர்கள் கல்கத்தா சிறைக்கு மாற்றப்பட்டனர்.
- கலவரத்தை திறம்பட அடக்கிய ஆங்கிலேய இராணுவ வீரர்களுக்கு பரிசும் பதவி உயர்வும் அளிக்கப்பட்டது.
- தலைமை தளபதி ஜான்கிரடாக், அக்னியூ, ஆளுநர் வில்லியம் பெண்டிங் திரும்ப அழைக்கப்பட்டு பதவி பறிக்கப்பட்டது.
- புதிய இராணுவ விதிமுறைகள் திரும்ப பெறப்பட்டன.

33. **வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்:**

- இராஜாஜி, காந்தியடிகளின் தண்டியாத்திரை போன்று நம் தமிழகத்திலும் உப்புச் சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடு செய்தார்.
- அதற்கு தலைமையேற்று திருச்சியிலிருந்து வேதாரண்யம் நோக்கி அணிவகுப்பாக சென்றார்கள்.
- இந்த அணிவகுப்பில் T.S.S. இராஜன் - திருமதி ருக்மணி லட்சுமிபதி - சர்தார் வேதரத்தினம் ஆகியோர் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டவர்கள்.
- சத்தியாகிரக தியாகிகளுக்கு வழியெங்கும் வரவேற்பு கொடுக்கப்பட்டது.
- பாதயாத்திரையில் கவிஞர் இராமலிங்கனார், 'கத்தியின்றி யுத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் இந்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என்ற பாடலைப் பாடினார்.
- உப்புச் சட்டத்தை மீறியதற்காக இராஜாஜி உட்பட அனைவரையும் ஆங்கில அரசு கைது செய்தது.

34. **இமயமலையின் உட்பிரிவுகள் மற்றும் அதன் முக்கியத்துவம்:**

இந்தியாவின் இயற்கை அரணாக உள்ள இமயமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- ட்ரான்ஸ் இமயமலைகள் – மேற்கு இமயமலைகள்
- இமயமலைகள் – மத்திய இமயமலை
- பூர்வாஞ்சல் குன்றுகள் – கிழக்கு இமயமலை

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

1. **ட்ரான்ஸ் இமயமலைகள் (மேற்கு இமயமலைகள்)**
   - இமயமலைக்கு வடக்கே மிக உயர்ந்து செங்குத்தாக 40 கி.மீ அகலத்துடன் உள்ளது.
   - காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
   - மலைகள்: காரகோரம், லடாக், ஜாஸ்கர், கைலாஷ்.
2. **இமயமலைகள் (மத்திய இமயமலை மற்றும் வடக்கு மலையின் பெரும்பகுதி)**
   - உள் இமயமலைகள் - இமாத்ரி: அகலம் 25 கி.மீ., உயரம் 600 மீ.
   - மத்திய இமயமலைகள் - இமாச்சல்: அகலம் 80 கி.மீ., உயரம் 3500 மீட்டர் வரை.
   - வெளி இமயமலைகள் - சிவாலிக்: அகலம் 10 முதல் 50 கி.மீ., உயரம் 100 மீ.
   - கோடை வாழிடங்கள்: சிம்லா முசெளரி ஆகியவை.
   - சிகரங்கள்: எவரெஸ்ட், கஞ்சன்ஜங்கா.
   - பனியாறுகள்: கங்கோத்ரி, சியாச்சின்.
3. **பூர்வாஞ்சல் குன்றுகள் (கிழக்கு இமயமலை):**
   - இமயமலையின் கிழக்குக் கிளையாகும்.
   - பரவல்: வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மியான்மர் நாடுகளில் பரவியுள்ளது.

**முக்கியத்துவம்:**
- தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வடபகுதிக்கு கனமழை தருகின்றது.
- இந்திய துணைக்கண்டத்தின் இயற்கை அரணாக விளங்குகிறது.
- வற்றாத நதிகளின் பிறப்பிடம் (சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா).
- இயற்கை அழகு நிறைந்த மலைகள் கொண்டது.
- சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கின்றது.
- கோடை வாழிடங்கள் (குலுமணாலி, சிம்லா, டேராடூன், டார்ஜிலிங்).
- புனிதத்தலங்கள் (அமர்நாத், பத்ரிநாத், வைஷ்ணவி கோயில், கேதார்நாத், கயிலாயம்)
- காடு சார்ந்த மூலப் பொருட்கள் கிடைக்கின்றன.
- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர் காற்றை தடுத்து இந்தியாவை கடும் குளிரிலிருந்து பாதுகாக்கின்றது.
- இமயமலை ஒரு பல்லுயிர் மண்டலமாக விளங்குகிறது.

35. **இந்தியாவின் பல்நோக்குத் திட்டங்கள்:**

**பல் நோக்குத் திட்டம்:**
- அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மைத் திட்டம்.
- ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டி நீர்வளம் மற்றும் நீர்மின் சக்தி கொண்ட பல் நோக்குத் திட்டம்.

**நோக்கங்கள்:**
- விவசாயம், குடிநீர் மின் உற்பத்தி, மீன் வளர்ப்பு, சுற்றுலா மையம் பயன்பாடுகள் கொண்டவை.

**மிக முக்கியமான இரண்டு பல்நோக்குத் திட்டங்கள்:**

1. **ஒடிசா - மகாநதி - ஹிராகுட் திட்டம்:**
   - உலகின் மிக நீளமான அணையாகும்.
   - மகாநதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது.
   - ஒடிசா மாநிலம் அதிகம் பயன்பெறுகின்றது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**2. பக்ரா நங்கல் திட்டம்:**

- உலகின் பெரிய புவிஈர்ப்பு அணையாகும்
- சட்லெஜ் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளது.
- அதிகம் பயன்பெறும் மாநிலங்கள்: பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான்.

36. **மனிதனால் உண்டாகும் பேரிடர்கள்:**

- மனிதர்களால் உருவாகும் பேரிடர்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. அதன் முக்கிய காரணங்களில் ஒன்று கவனக்குறைவு.
- மனித பேரிடர்களில் மிக முக்கியமானது தீ ஏற்படுத்தும் இழப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள்.
- தொழிற்சாலைகளில் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அங்கு ஏற்படும் விபத்துகள்.
- விதிமுறைகளைப் பின்பற்றாமை மற்றும் கூட்ட நெரிசல்.

**பாதிப்பினைக் குறைத்தல்:**

- மனித உயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பது ஆகும். அதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகள்.
- சாலை விபத்து, மின் சாதனங்களை கையாளும்போது ஏற்படும் நெருக்கடிகள், இயந்திரங்களைக் கையாளுதல், தொடர் பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கை மேற்கொள்வது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் பாதிப்பு நிலையில் மற்றும் பாதிப்புக்கு பின் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகளை கையாளுதல்.

37. **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்:**

- உலகில் எழுதப்பட்ட எல்லா அரசியலமைப்புகளுள் மிகவும் நீளமானது.
- இதன் பல்வேறு அம்சங்கள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.
- நெகிழும் தன்மை மற்றும் நெகிழாத் தன்மை கொண்டது.
- கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது (மத்திய - மாநில அரசுகள்)
- மத்திய மற்றும் மாநிலங்களில் நாடாளுமன்ற சட்டமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவை சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- அனைவருக்கும் சுதந்திரமான நீதியை வழங்குகிறது.
- எந்தவிதமான வேறுபாடின்றி 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை வழங்குகிறது.
- குடிமக்களுக்கு ஒற்றைக் குடியுரிமை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், அட்டவணைப்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சிலருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

38. **இந்திய - மேற்கு ஆசியாவின் முக்கியத்துவம்:**

- மேற்கு ஆசியப் பகுதிகள் எகிப்து, அரேபிய தீபகற்ப பகுதிகள், துருக்கி மற்றும் ஈரானை உள்ளடக்கியது.
- வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் மேற்காசியப் பகுதிகளுடன் இந்தியா நல்லுறவு கொண்டிருக்கிறது.
- மெசபடோமிய நாகரீகம், இந்திய சிந்துவெளி நாகரீகத்துடன் ஒத்திருப்பதை அறியலாம்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- மேற்கு ஆசிய நாடுகள் எண்ணெய் வளம் மிக்கதாகவும், இந்தியாவிற்கு எரிபொருள் தேவையை அறிந்தும் உதவி செய்கின்றன.
- இந்தியா, ஆப்கனிஸ்தான் மற்றும் ஈரான் உடன் மேற்கொள்ளப்பட்ட முக்கூட்டு ஒப்பந்தம் (சபஹார் ஒப்பந்தம்) முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.
- மத்திய ஆசிய நாடுகளுக்கான நில நுழைவு வாயிலாக இந்தியா உள்ளது.

39. **நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கான பல்வேறு கருத்துகள்:**

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பயணிகளின் மொத்த மதிப்பாகும்.

**மொத்த நாட்டு உற்பத்தி (GNP):**

மொத்த நாட்டு உற்பத்தி என்பது நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் ஈட்டிய வருமானம் + உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் = பணிகளின் மதிப்பைக் குறிக்கும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP):**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பைக் குறிக்கும்.

**நிகர நாட்டு உற்பத்தி (NDP):**

நாட்டின் மொத்த உற்பத்தியில் தேய்மானம் கழித்த பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

**தலா வருமானம் (PCI):**

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP):**

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை கழித்த பின் கிடைப்பது.

**தனிப்பட்ட வருமானம் (PI):**

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

**செலவிடத் தகுதியான வருமானம் (DI):**

- நமது வருமானத்தில் நுகர்வுக்கு செலவு செய்யும் தொகை.
- வருமான வரிகட்டுதல், நுகர்வுச் செலவு, சேமிப்பு மற்றும் முதலீடு.

40. **தொழிற்துறை தொகுப்புகளின் முக்கிய பங்குகள்:**

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல் வேண்டும்.
- துறை சார்ந்த சிறப்புக் கவனம் வேண்டும்.
- நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல் வேண்டும்.
- புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி இருக்க வேண்டும்.
- நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம் இருத்தல் வேண்டும்.
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள் அமைதல் வேண்டும்.
- சுய உதவிக் குழுக்கள் செயல்படுதல் வேண்டும்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- வட்டார மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு இருத்தல் வேண்டும்.
- போட்டிகள் மூலம் திறமையானவர்கள் கண்டறிதல் வேண்டும்.
- வட்டார தொழில்துறை வளர்ச்சி பரவல்.

**எ.கா:** விருதுநகர் மாவட்டம்: பட்டாசு, தீப்பெட்டி, அச்சுத் தொழில் நுட்பம்.
நாமக்கல் மாவட்டம்: கோழிப்பண்ணைகள், வாகன வடிவமைப்பு கட்டுதல்.
கொங்கு மண்டலம்: பருத்தி நெசவாலைகள், கைத்தறி துணிகள்,
திருப்பூர்: பின்னலாடையின் மையம்.
கரூர்: வாகன வடிவமைப்பு - நெசவுத் தலைநகரம்.

41. **காலக்கோடு: 1990 - 1920**




42. **(i) சான்பிரான்சிஸ்கோ (ii) பிரான்ஸ் (iii) கிரேட் பிரிட்டன் (iv) மொராக்கோ (v) இத்தாலி**




Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## பகுதி - IV

43. **திலகரும், அன்னிபெசன்ட் அம்மையாரும் (தன்னாட்சி இயக்கம்):**

- திலகர் - அன்னிபெசன்ட் தலைமையின்கீழ் தன்னாட்சி இயக்கம் (1916-1918) புத்துயிர் பெற்றது.
- முதல் உலகப் போரில் இந்தியா ஈடுபட்டதே தன்னாட்சி இயக்கத்திற்கான பின்னணி.
- ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்கு தன்னாட்சி வழங்குவார்கள் என எதிர்பார்த்தனர்.
- உலகின் பல பகுதிகளுக்கு இந்திய துருப்புகள் அனுப்பப்பட்டது.
- ஆனால், ஆங்கில அரசு ஏமாற்றியதால், ஆங்கிலேயர்களுக்கு நெருக்கடி தர புதிய மக்கள் இயக்கத்துக்கான அழைப்பாக இது உருவெடுத்தது.
- இளைஞர்களை அதிக அளவில் சேர்த்து ஊரகப்பகுதிகளில் போராட்டங்களை முன்னெடுத்தது.
- பத்திரிகை, உரைகள், பொதுக்கூட்டங்கள் போன்றவைகள் தீவிர சுற்றுப்பயணம் மூலம் முன்னெடுத்தனர்.
- இந்த தன்னாட்டு இயக்கம் அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கத்தோடு ஒத்திருந்தது.

**(அல்லது)**

i. **தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி மற்றும் வளர்ச்சி:**

- தென்னாப்பிரிக்காவில் யூனியனிஸ்ட் கட்சி, ஆப்பிரிக்க நேர்ஸ் என்ற இரு பெரிய கட்சிகள் செயல்பட்டன.
- முதல் பிரதம மந்திரியான போதா ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார்.
- ஹெர்சாக் தலைமையில் கீழ் தேசியக் கட்சி எனும் அமைப்பை தொடங்கினார்.
- 1920 தேர்தலில் தேசியக் கட்சி 44 இடங்களைக் கைப்பற்றியது.
- தென்னாப்பிரிக்கா கட்சி ஸ்மட்ஸ் தலைமையில் 41 இடங்களைக் கைப்பற்றியது.
- போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்க நேர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசிய கட்சியை காட்டிலும் ஸ்மட்ஸ் பெரும்பான்மை பெற்றார்.
- 1920 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஸ்மட்ஸ் என்பவர் வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றார்.
- இரண்டாம் உலகப்போர் தொடங்கியபோது ஜெர்மனிக்கு எதிராக இங்கிலாந்தை ஆதரிப்பது என்ற விஷயத்தில் பிளவு ஏற்பட்டது.
- நாசிசத்தை எதிர்த்த ஸ்மட்ஸ் தென் ஆப்பிரிக்கா இங்கிலாந்திற்கு உதவ வேண்டும் என விரும்பினார்.
- ஹிட்லரிடம் பரிவு கொண்ட ஹெர்சாக் நடுநிலைக் கொள்கையை கடைப்பிடிக்க விரும்பினார்.
- ஸ்மட்ஸ் 1948 வரை பிரதமராகத் தொடர்ந்து பணியாற்றினார்.
- நேசநாடுகளின் வெற்றியை அடுத்து 1948 ஆம் ஆண்டு தேர்தலில் தேசிய காங்கிரஸ் கூட்டணி அரசு பெரும் வெற்றியைப் பெற்றது.
- ஆப்பிரிக்க நேர்கள் கட்சி கறுப்பின மக்களுக்கும், இந்திய சிறுபான்மையினருக்கும் எதிரான நிலையை எடுத்தது.
- மாநிலத்தில் கறுப்பின மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டது.
- நெல்சன் மண்டேலா தொடர்ந்து போராடவே 27 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

- 1990 இல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவரானார்.

**ii. சமூக சீர்திருத்தத்திற்கு ஈஸ்வர சந்திர வித்யாசாகர் பங்களிப்பு:**

- வங்காளத்தைச் சேர்ந்த முதன்மையான சமூக சீர்திருத்தவாதி.
- நவீன வங்காளத்தின் உரைநடையில் சிறந்தவர்.
- இந்து சமய மறைநூல்களில் கூட விதவை மறுமண மறுப்பு இல்லை எனக் கூறினார்.
- இவர் இயக்கத்தின் முயற்சியால் 1856 ஆம் ஆண்டில் விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.
- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.
- பெண் கல்வியை மேம்படுத்த பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவினார்.
- இவரின் சாதனைகளில் முக்கியமானது 1860 இல் திருமண பொதுச்சட்டம் இயற்றப் பட்டது.

44.




★★★

www.Padasalai.Net

# PTA மாதிரி வினாத்தாள் - 2

வினாத்தாள் 2

வகுப்பு: X

## சமூக அறிவியல்

காலஅளவு: 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. **உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?**
அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

2. **கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணத்திற்கான சரியான விடையை அடையாளம் காண்க.**
**கூற்று : அமெரிக்காவின் மார்ஷல் திட்டம், போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறுநிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது.**
**காரணம் : அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டு வர நினைத்தது.**
அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
ஆ) கூற்றும், காரணமும் தவறானவை.
இ) கூற்று, காரணம் இரண்டுமே சரி. காரணம் கூற்றை துல்லியமாக விளக்குகிறது.
ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி.

3. **'சத்யார்த்த பிரகாஷ்' எனும் நூலின் ஆசிரியர்?**
அ) தயானந்த சரஸ்வதி ஆ) வைகுண்ட சுவாமி
இ) அன்னிபெசன்ட் ஈ) சுவாமி சித்தானந்தா

4. **(i) பாளையக்காரர் முறை காகத்தியப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.**
**(ii) கான்சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும் செவலை 1764-இல் மீண்டும் கைப்பற்றினார்.**
**(iii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதாக யூசுப்கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764-இல் தூக்கிலிடப்பட்டார்.**
**(iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைபிரிவுகளில் ஒன்றை வழி நடத்தினார்.**
அ) (i), (ii) மற்றும் (iii) ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
இ) (iii) மற்றும் (iv) மட்டும் சரி ஈ) (i) மற்றும் (iv) மட்டும் சரி

5. **ஃபீனிக்ஸ் குடியிருப்பு யாரால் நிறுவப்பட்டது?**
அ) காந்தியடிகள் ஆ) ஜான் ரஸ்கின் இ) டால்ஸ்டாய் ஈ) தாரோ

6. **தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம்**
அ) ஊட்டி ஆ) ஆனைமுடி இ) கொடைகானல் ஈ) ஜின்டாகடா

7. **இந்தியாவின் 'தங்க இழைப்பயிர்' என அழைக்கப்படுவது**
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**8. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்**
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

**9. கீழ்க்கண்டவற்றில் எவை ஹெலிகாப்டருடன் தொடர்புடையது?**
அ) ஏர் இந்தியா ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ் இ) வாயுதூத் ஈ) பவன் ஹான்ஸ்

**10. ''தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம்'' எது?**
அ) கரூர் ஆ) கோயம்புத்தூர் இ) திருப்பூர் ஈ) ஈரோடு

**11. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.**
அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

**12. மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தராக செயல்படுபவர் யார்?**
அ) குடியரசுத்தலைவர் ஆ) ஆளுநர் இ) பிரதமர் ஈ) முதலமைச்சர்

**13. நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது**
அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம் ஆ) மொத்த நாட்டு உற்பத்தி - தேய்மானம்
இ) தனிப்பட்ட வருமானம் - நேர்முகவரி ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

**14. தவறான கூற்றை, கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்.**
**(i) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணமாகும்.**
**(ii) கருப்புபணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற்துறையாகும்.**
**(iii) கருப்புபணம் உருவாவதற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலமாகும்.**
**(iv) வரிவிகிதம் குறைவாக இருக்கும் போது அதிக கருப்புபணம் தோன்றுகிறது.**
அ) (i) மற்றும் (ii) ஆ) (vi) இ) (i) ஈ) (ii) மற்றும் (iii)

## பகுதி - II

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10×2=20**
**ii) 28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15. ''டாலர் ஏகாதிபத்தியம்'' தெளிவுபட விளக்குக.
16. மூன்றாம் உலகநாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
17. 1801-ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.
18. சம்பரான் சத்யாக்கிரகம் பற்றி நீவிர் அறிவன என்ன?
19. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
20. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
21. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.
22. மனிதவள மேம்பாடு என்றால் என்ன?
23. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?
24. உலகப் பாதுகாப்புக் குறித்த இந்தியாவின் எவ்வகையில் பிரதிபலிக்கின்றன?
25. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டம் குறித்து எழுதுக.
26. இரண்டாம் துறை - குறிப்பு எழுதுக.
27. 'கப்பலுக்கு வாயில்' நிகழ்வை விளக்குக.
28. புவியியல் குறியீடு - குறிப்பு வரைக.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## பகுதி - III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 10×5=50
**ii) 42வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| i) மாட்டியோட்டி | - | எகிப்து |
| ii) அன்வர்சாதத் | - | தீர்ப்பாயங்கள் |
| iii) தீர்த்தகிரி | - | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| iv) ஆயுதப்படையினர் | - | இத்தாலி |
| v) COMCASA | - | ஓடாநிலை |

30. அ) வேறுபடுத்துக.
 i) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.
 ii) உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப்பயிர்கள்.
 ஆ) காரணம் கூறுக: வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.
31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
32. இந்திய தேசிய காங்கிரசின் தொடக்கால கோரிக்கைகளைப் பற்றி எழுதுக.
33. சமூக நீதிக்கான நீதிக்கட்சியின் பங்களிப்பை சுட்டிக்காட்டுக.
34. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
35. இந்தியாவின் முக்கிய இரும்பு எஃகு தொழிலகங்கள் பற்றி ஒரு தொகுப்பு எழுதுக.
36. தமிழ்நாட்டில் காணப்படும் காடுகளின் வகைகள் பற்றி எழுதுக.
37. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38. படைவலிமை குறைப்புக் கொள்கை பற்றி விவரிக்க.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. தமிழ்நாட்டில் நெசவுத்தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
 1920 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
 (i) டெல்லி (ii) மீரட் (iii) லக்னோ (iv) பாரக்பூர் (v) ஜான்சி

## பகுதி - IV

**குறிப்பு: i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2×8=16

43. பெண்களின் மேம்பாட்டிற்கு 19-ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றும் பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. **(அல்லது)**
 i) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
 ii) தமிழ்நாட்டில் ரௌலட் சத்தியாகிரக நிகழ்வுகளை தொகுத்து எழுதுக.
44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**
 i) மும்பை ஹை ii) கங்கை ஆறு iii) சோட்டா நாக்பூர் பீடபூமி iv) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை v) கரிசல்மண் காணப்படும் ஒரு பகுதி vi) சிலிகா ஏரி vii) காவிரி டெல்டா viii) கிழக்கு தொடர்ச்சி மலைகள். **(அல்லது)**

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**கொடுக்கப்பட்டுள்ள தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**

i) பாக் நீர்ச்சந்தி ii) பழவேற்காடு ஏரி iii) பழநிமலை iv) காவிரி ஆறு v) பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் vi) தூத்துக்குடி துறைமுகம் vii) ஊட்டி viii) சென்னை - பெங்களூரு இணைக்கும் தங்க நாற்கரச் சாலை.

★★★

**விடைகள்** **PTA மாதிரி வினாத்தாள் - 2** **வினாத்தாள் - 2**

## பகுதி - I

1. ஆ) லத்தீன் அமெரிக்கா
2. இ) கூற்று காரணம் இரண்டுமே சரி. காரணம் கூற்றை துல்லியமாக விளக்குகிறது.
3. அ) தயானந்த சரஸ்வதி
4. ஆ) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி
5. அ) காந்தியடிகள்
6. ஆ) ஆனைமுடி
7. இ) சணல்
8. இ) மகாராஷ்டிரம்
9. ஈ) பவன் ஹான்ஸ்
10. அ) கரூர்
11. இ) சொத்துரிமை
12. ஆ) ஆளுநர்
13. அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானம்
14. ஆ) (iv)

## பகுதி - II

15. **டாலர் ஏகாதிபத்தியம்:**
   - அமெரிக்கா பின்பற்றியக் கொள்கை டாலர் ஏகாதிபத்தியம்.
   - தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்து ஆதிக்கம் செலுத்தி அதன் மூலம் அந்த நாடுகளை தக்க வைத்துக்கொள்ள அமெரிக்காவிற்குப் பயன்பட்டது.
16. **மூன்றாம் உலக நாடுகள்:**
   - இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகம் இரண்டாகப் பிரிந்தது.
   - அவை: அமெரிக்கா (முதலாளித்துவ தலைமை), ரஷ்யா (கம்யூனிசத் தலைமை).
   - இந்த இரு அணியில் சேராமல் நடுநிலைமை வகித்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் (ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள்) எனப்பட்டன.
   - இந்த மூன்றாம் உலக நாடுகள் ஆசிய - ஆப்பிரிக்க - லத்தீன் அமெரிக்காவில் சில நாடுகளைக் கொண்டது.
17. **1801-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் (கர்நாடக உடன்படிக்கை):**
   - பாளையக்காரர்களின் கலகங்கள் 1799 மற்றும் 1800-1801-ஆம் ஆண்டுகளில் அடக்கப்பட்டன.
   - 1801 ஜூலை 31 ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின்படி பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின்மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர்.
   - பாளையக்காரர் முறையை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் அனைத்து கோட்டைகளையும் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர்.
18. **சம்பரான் சத்யாகிரகம்:**
   - பீகார் சம்பரானில் விவசாயிகள் தங்கள் நிலத்தில் அவுரி இண்டிகோ பயிரிட வற்புறுத்தப்பட்டனர்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# PTA மாதிரி வினாத்தாள் - 3

வினாத்தாள் 3

வகுப்பு: X

## சமூக அறிவியல்

கால அளவு: 3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. **தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரிதப்படுத்தியது எது?**
அ) அமெரிக்கா அளித்த உதவி ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்
இ) சைமன் பொலிவரின் பங்கேற்பு ஈ) பிரெஞ்சுப் புரட்சி

2. **வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?**
அ) 1975 ஆ) 1976 இ) 1973 ஈ) 1974

3. **விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்?**
அ) M.G. ரானடே ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) ஜோதியா பூவே ஈ) அய்யன்காளி

4. **கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணத்திற்கான சரியான விடையை அடையாளம் காண்க.**
**கூற்று : இந்திய வரலாற்றில் முதன்முறையாக காலனி ஆட்சியின்கீழ் அரசு வனங்களின் மீது நேரடியாக தனியுரிமையைக் கோரியது.**
**காரணம் : இண்டிகோ விவசாயம் செய்யுமாறு விவசாயிகளை நிர்பந்திக்க தொழில் செய்வோர் மிரட்டல் மற்றும் வன்முறையைக் கையாண்டார்.**
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு.
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

5. **தமிழ் இசை வரலாறு குறித்த நூல் யாரால் வெளியிடப்பட்டது?**
அ) ஆபிரகாம் பண்டிதர் ஆ) சாமிநாதர் இ) மறைமலை அடிகள் ஈ) சுப்ரமணிய பாரதி

6. **மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி......என அழைக்கப்படுகிறது.**
அ) கடற்கரை ஆ) தீவு இ) தீபகற்பம் ஈ) நீர்ச்சந்தி

7. **பொருந்தாத விடையைத் தேர்வு செய்க.**
**இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்**
அ) அட்சபரவல் ஆ) உயரம்
இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் ஈ) மண்

8. **பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும்.....**
அ) ஆக்ஸிஜன் ஆ) நீர் இ) கார்பன் ஈ) நைட்ரஜன்

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**9. கீழ்க்கண்டவற்றில் அரபிக்கடலில் கலக்கும் ஆறு எது?**
அ) பெரியார் ஆ) காவிரி இ) சிற்றாறு ஈ) பவானி

**10. தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை**
அ) NH 44 ஆ) NH 7 இ) NH 45 ஈ) NH 66

**11. நாடாளுமன்ற மேலவைக்கு தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை?**
அ) 16 ஆ) 17 இ) 18 ஈ) 19

**12. கொடுக்கப்பட்டுள்ள கூற்று மற்றும் காரணத்திற்கான சரியான விடையை அடையாளம் காண்க.**
**கூற்று** : இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது.
**காரணம்** : உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்ட நாடு ஆகும்.
அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று சரி ஆனால் கூற்றுக்கான விளக்கமல்ல.
இ) கூற்று தவறு காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

**13. இந்தியாவில் காலனியாதிக்க வருகை**
அ) போர்ச்சுக்கீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
இ) போர்ச்சுக்கீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்
ஈ) டேனிஷ், போர்ச்சுக்கீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு

**14. TANSI கழகம் எதனை மேற்பார்வையிட அமைக்கப்பட்டது?**
அ) சிறிய அளவிலான தொழிற்சாலைகள் ஆ) கனரக தொழிற்சாலைகள்
இ) குடிசைத் தொழில் தொழிற்சாலைகள் ஈ) இலகு ரக தொழிற்சாலைகள்

## பகுதி - II

குறிப்பு: i) **எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **10×2=20**
ii) **28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15. பதுங்குக்குழிப் போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
16. மாவோயின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.
17. வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?
18. பெரியார் ‘வைக்கம் வீரர்’ என அழைக்கப்படுவது ஏன்?
19. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
20. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
21. மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பிடுக.
22. பன்னாட்டு வணிகம் – வரையறு.
23. ஏதேனும் இரு அடிப்படை உரிமைகளை எழுதுக.
24. மக்களவையின் சபாநாயகர் பற்றி குறிப்பு வரைக.
25. உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை வேறுபடுத்துக.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

26. 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என கோயம்புத்தூர் குறிப்பிடப்படுவது ஏன்?
27. தலா வருமானம் என்றால் என்ன?
28. மண்வள பாதுகாப்பு மற்றும் மண்வள மேலாண்மையின் முறைகளைக் குறிப்பிடுக.

## பகுதி - III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **10×5=50**
**ii) 42வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:
(i) ------- என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
(ii) ------- இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பு ஆகும்.
(iii) தேயிலை மற்றும் காபி செடிகள் பயிரிடுவதற்கு ஏற்ற மண் ------- ஆகும்.
(iv) இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை ------- ஆகும்.
(v) ------- ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.

30. அ) வேறுபடுத்துக.
(i) உலோக கனிமங்கள் மற்றும் அலோக கனிமங்கள்
(ii) மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்
ஆ) காரணம் கூறுக: தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிகக்குறைந்த மழையைப் பெறுகிறது.

31. இரண்டாம் உலகப்போரின்போது முத்து துறைமுகம் தாக்கப்பட்ட நிகழ்வு எங்ஙனம் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்தது?
32. இந்திய சமூகத்தின் புத்தெழுச்சிக்கு ராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றியத் தொண்டினை திறனாய்வு செய்க.
33. சுதேசி இயக்கத்தில் வ.உ.சி.யின் பங்கு குறித்து எழுதுக.
34. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.
35. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்துக.
36. வேளாண்மையினைத் தீர்மானிக்கும் புவியியல் காரணிகளுள் ஏதேனும் இரண்டினை விளக்குக.
37. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விளக்குக.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.
40. பசுமைப்புரட்சி ஏன் தோன்றியது என்பதை பற்றி விவரி.
41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
(i) ஹிரோசிமா (ii) ஜெர்மனி (iii) மாஸ்கோ (iv) துருக்கி (v) கிரீஸ்

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## பகுதி - IV

**குறிப்பு: i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2×8=16

43. இத்தாலியில் முசோலினியின் எழுச்சியினைப் பற்றி கூறுக.

**(அல்லது)**

i) சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எழுதுக.

ii) காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.

44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**

i) இந்தியாவின் மின்னியல் தலைநகரம் ii) பிரம்மபுத்ரா ஆறு iii) தக்காண பீடபூமி iv) அதிக மழை பெறும் ஒரு பகுதி v) ஹிராகுட் அணை vi) தூத்துக்குடி vii) கோதாவரி டெல்டா viii) கொல்லேறு ஏரி **(அல்லது)**

**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**

i) காவிரி டெல்டா பகுதி ii) ஏலகிரி குன்று iii) முக்குறுத்தி ஏரி iv) உவர்மண் பகுதி v) நெல் விளையும் முக்கிய பகுதி vi) செம்பரம்பாக்கம் vii) சென்னை துறைமுகம் viii) நாகப்பட்டினத்திலிருந்து சென்னை வரையிலான கடல்வழி.

★★★

**விடைகள்**

# PTA மாதிரி வினாத்தாள் - 3

**வினாத்தாள் - 3**

## பகுதி - I

1. ஆ) நெப்போலியன் படையெடுப்புகள்
2. ஆ) 1976
3. அ) M.G. ரானடே
4. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
5. அ) ஆபிரகாம் பண்டிதர்
6. இ) தீபகற்பம்
7. ஈ) மண்
8. இ) கார்பன்
9. அ) பெரியார்
10. ஆ) NH 44
11. இ) 18
12. ஆ) கூற்று சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான விளக்கமல்ல
13. அ) போர்ச்சுக்கீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
14. அ) சிறிய அளவிலான தொழிற்சாலைகள்

## பகுதி - II

15. **பதுங்குகுழிப் போர்முறை:**

- இது முதல் உலகப்போரின்போது அறிமுகம் செய்யப்பட்டது.
- போர்க்களத்தில் போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குகுழிகள்.
| 2. | பண்ணைகள், தொழிற்சாலைகள் (சந்தைகள்) இடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. | சரக்கு போக்குவரத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. |
| 3. | குறுகிய தூர பயணத்திற்கு ஏற்றது. | தொலைதூர பயணத்திற்கு ஏற்றது. |

**ஆ) கிழக்குத் தொடர்ச்சி மலையானது தொடர்ச்சியற்ற குன்றுகளாகும் - காரணம்:**

- கிழக்குத் தொடர்ச்சி மலையானது பல இடங்களில் வங்கக்கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது.
- தீபகற்ப பீடபூமியும் பல இடங்களில் இம்மலைத் தொடரைப் பிரிக்கிறது.

Kindly send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

33. **ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 6 - வினாத்தாள் 6 - வினா எண் 31.**

34. **1857 ஆம் ஆண்டின் பெருங்கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 4 - வினாத்தாள் 4 - வினா எண் 32.**

35. **இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைச் சமவெளிகள்:**

| எண் | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி |
|---|---|---|
| 1. | ரான்ஆஃப்கட்ச் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. | மேற்கு வங்கம் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. |
| 2. | கொங்கணம், கனரா, மலபார் கடற்கரை பகுதிகளில் அமைந்துள்ளது. | வடசர்க்கார், சோழமண்டல கடற்கரை பகுதிகளில் அமைந்துள்ளது. |
| 3. | மேற்கில் அரபிக்கடல் உள்ளது. | கிழக்கில் வங்காள விரிகுடா உள்ளது. |
| 4. | வேம்பநாடு ஏரி இப்பகுதியில் உள்ள முக்கிய ஏரியாகும். | சிலிகா ஏரி இதன் முக்கிய ஏரியாகும். |

36. **நகரமயமாக்கம் மற்றும் இதன் தாக்கங்கள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 5 - வினாத்தாள் 5 - வினா எண் 35.**

37. **ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள்:**

- ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார்.
- மாநில ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.
- பொதுத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நியமனம் முடிந்த பின்பு முதல் கூட்டத்தைக் கூட்டி உரையாற்றுகிறார்.
- சட்டமன்றத்தைக் கூட்டவும், கலைக்கவும், ஒத்திவைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் எந்தவொரு மசோதாவும் மாநில ஆளுநர் கையொப்பம் இட்ட பின்பே மசோதாவாகும்.
- சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்து ஆலோசித்து முடிவுசெய்வது.
- ஆங்கிலோ - இந்தியன் வகுப்பினரில் இருந்து ஓர் உறுப்பினரை சட்டமன்றத்திற்கு நியமனம் செய்கின்றார்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213 இன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாதபோது அவசர சட்டம் பிறப்பிக்கலாம்.
- மாநிலத்தில் ஆண்டு நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்), அரசின் தணிக்கைக் குழு அறிக்கைகளைச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

38. **இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கை:**

- நமது வெளியுறவுக் கொள்கை அடிப்படையானது சர்வதேச உறவுகளில் ஒன்றையொன்று சார்ந்திருப்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது.
- ஆயுதக் குறைப்பு செய்தல்.
- தேசியநலன் பேணுதல்.
- உலக அமைதியைப் பெறுதல்.
- பிறநாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்.
- அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- அணிசேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு கொண்டிருத்தல்.
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம் காணுதல்.
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு கொண்டிருத்தல்.

39. **உலகமயமாக்கலின் சவால்கள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 2 - வினாத்தாள் 2 - வினா எண் 39.**

40. **இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்கள்:**

- இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரிய வித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் உற்பத்தித்திறனை மேம்படத்துவதாகும்.
- வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவது.
- உடல் உற்பத்தியை உயர்த்துவதை விட ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்படுவதை அதிகரிப்பது.
- ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன், ஆதரவை விரிவுபடுத்துதல், நிலச் சீர்திருத்தங்கள் செய்தல்.
- இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின் மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.
- விவசாயக் கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கை நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் விதைகள் உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.
- இந்திய விவசாயத் தனி இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் பாதிப்பு அடையாமல் இந்தியாவின் விவசாயக் கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

41. **காலக்கோடு: 1920 - 1940**




Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- ஜீவகாருண்யம் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர்.
- பஞ்சத்தின் கொடுமையைப் போக்க சத்திய தருமசாலை உணவகத்தைத் திறந்தவர்.
- இவரது பாடல்கள் திருஅருட்பா எனப்படும். **(அல்லது)**

ஆ) **இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய தொடக்கக்கால சத்தியாகிரகங்கள்:**

**தென்னாப்பிரிக்கா சத்தியாகிரகம்:**

- பிரிட்டோரியா இரயில் பயணத்தில் இனவெறியால் பாதிக்கப்பட்டார்.
- டிரான்ஸ்வால் வாழ் இந்தியர்களின் குடியுரிமை அநீதிக்கு எதிராகப் போராடினார்.
- ஃபீனிக்ஸ் குடியிருப்பு மற்றும் டால்ஸ்டாய் பண்ணைகளை நிறுவினார்.
- அதுவே காந்தியடிகளுக்கு சத்தியாகிரக பயிற்சிக் களங்களாக அமைந்தன.

**பீகார் சம்பரான் இயக்கம் மற்றும் அகமதாபாத் - கேதா போராட்டம்:**

- பீகாரிலுள்ள சம்பரானில் 'தீன் காதியா' முறையை பின்பற்றியதை எதிர்த்து விவசாயிகள் ஆங்கிலேய சுரண்டல்களிலிருந்து பாதுகாத்தவர்.
- அகமதாபாத் மில் வேலை நிறுத்தம், கேதா சத்தியாகிரகம் போன்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெற்றியை தேடித் தந்தவர்.

**ஒத்துழையாமை இயக்கம்:**

ரௌலட் சட்டம் மற்றும் பஞ்சாப் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து 1920 செப்டம்பரில் ஒத்துழையாமை இயக்கத்தை இந்தியா முழுவதும் பரவச் செய்தார்.

**வரிகொடா இயக்கம்:**

1922 பிப்ரவரி மாதம் குஜராத் பர்தோலியில் வரிகொடா இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த இயக்கம் நம் விவசாயிகள் மத்தியில் தேசிய தலைவராக நல்ல பெயரைத் தேடிதந்தது.

44.




Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# அரசு வினாத்தாள் - செப். 2021

வினாத்தாள் 8

வகுப்பு: X

## சமூக அறிவியல்

கால அளவு: 3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. **பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு**
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்சு

2. **அமெரிக்க பங்குசந்தைகளில் முதல் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட நாள்**
அ) 24 அக்டோபர் 1929 ஆ) 14 அக்டோபர் 1929
இ) 24 நவம்பர் 1925 ஈ) 24 நவம்பர் 1928

3. **அணிசேரா இயக்கத்தின் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாக கலந்து கொண்டவர்**
அ) லால்பகதூர் சாஸ்திரி ஆ) மோதிலால் நேரு
இ) ஜவஹர்லால் நேரு ஈ) வல்லபாய் பட்டேல்

4. **உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்ட ஆண்டு**
அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927

5. **கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857- ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.**
**காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வியடைந்தது.**
அ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி, மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி, மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை

6. **பொருத்துக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **1. சாம்பல் புரட்சி** | - | **i. முட்டை** | | அ) 1-iii, 2-i, 3-iv, 4-ii |
| **2. வெள்ளிப் புரட்சி** | - | **ii. இறைச்சி** | | ஆ) 1-iv, 2-iii, 3-i, 4-ii |
| **3. சிவப்புப் புரட்சி** | - | **iii. தோல்** | | இ) 1-iv, 2-i, 3-ii, 4-iii |
| **4. பழுப்புப் புரட்சி** | - | **iv. உரங்கள்** | | ஈ) 1-ii, 2-iv, 3-i, 4-iii |

7. **மேற்கத்திய இடையூறுகளால் மழைப் பொழிவைப் பெறும் பகுதி**
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்திய பிரதேசம்

8. **மாங்கனீசு ------ ல் பயன்படுகிறது.**
அ) மின் கலன்கள் ஆ) சிமெண்ட் தயாரிப்பு
இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு

9. **இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலம்**
அ) குஜராத் ஆ) சிக்கிம் இ) உத்திரப் பிரதேசம் ஈ) தமிழ்நாடு

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## பகுதி - III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **10×5=50**
**ii) 42வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவாதிக்கவும்.
30. இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை?
31. பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்த்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
32. வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
33. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது?
34. வடக்கு மலைகளின் (இமயமலை) உட்பிரிவுகளையும், அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரிக்கவும்.
35. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரிக்கவும்.
36. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. இந்திய குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரிக்கவும்.
39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரிக்கவும்.
40. இரு நேர்முக மற்றும் இரு மறைமுக வரிகளை விளக்குக.
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1910 முதல் 1940 வரையிலான இந்திய தேசிய இயக்க வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
42. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
(i) வேதாரண்யம் (ii) ஜான்சி (iii) மதராஸ் (iv) ஜாலியன்வாலாபாக் (v) பம்பாய்

## பகுதி - IV

**குறிப்பு: i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2×8=16**

43. அ) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பை மதிப்பீடு செய்யவும். **(அல்லது)**
ஆ) காந்தியடிகளின் சட்டமறுப்பு இயக்கத்தை பற்றி விவரிக்கவும்.
44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
(i) ஆரவல்லி மலைத்தொடர் (ii) வண்டல் மண் காணப்படும் பகுதி ஒன்று (iii) மலபார் கடற்கரை (iv) தென்மேற்கு பருவக் காற்று வீசும் திசை (v) அதிக மழை பெறும் பகுதி (vi) நிலக்கரி கிடைக்கும் இடம் (vii) மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலம் (viii) தக்காண பீடபூமி **(அல்லது)**
**கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
(i) வைகை ஆறு (ii) கரும்பு விளையும் பகுதி (iii) காஞ்சிபுரம் (iv) மேட்டூர் அணை (v) நாகப்பட்டினம் (vi) ஆனை மலை (vii) தமிழ்நாட்டின் மான்செஸ்டர் (viii) மேற்கு தொடர்ச்சி மலைகள்

★★★

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**விடைகள்** **அரசு வினாத்தாள் - செப். 2021** **வினாத்தாள் - 8**

## பகுதி - I

1. ஆ) ரஷ்யா
2. அ) 24 அக்டோபர் 1929
3. இ) ஜவஹர்லால் நேரு
4. ஆ) 1829
5. இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி, மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
6. இ) 1-iv, 2-i, 3-ii, 4-iii
7. இ) பஞ்சாப்
8. அ) மின் கலன்கள்
9. இ) உத்திரப் பிரதேசம்
10. அ) காபி
11. ஆ) ஆளுநர்
12. ஆ) இந்தியா – சீனா
13. அ) பொருளாதார வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.
14. அ) 1999

## பகுதி - II

15. **பதுங்குக் குழிப்போர் முறை:**
   - இது முதல் உலகப்போரின்போது அறிமுகம் செய்யப்பட்டது.
   - போர்க்களத்தில் போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குகுழிகள்.
   - எதிரிகளின் துப்பாக்கிச் சுடுதல், விமானத் தாக்குதல் போன்றவற்றிலிருந்து வீரர்கள் தங்களைப் பாதுகாக்க தோண்டியது.
   - பதுங்குகுழிகள் ஒவ்வொன்றும் பிரதான குழிகளுடன் இணைந்திருக்கும்.
   - இப்பதுங்கு குழிகளின் வாயிலாக உணவு, ஆயுதங்கள், ஆணைகள் கொண்டு செல்லப்பட்டது.

16. **பாளையக்காரர்களின் கடமைகள்:**
   - வரிவசூலிப்பது.
   - நிலப்பகுதிகள் நிர்வகிப்பது.
   - வழக்குகள் விசாரிப்பது.
   - சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது.
   - இவர்களின் காவல்காக்கும் கடமை – படிக்காவல் அல்லது அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது.

17. **வாரிசு இழப்பு கொள்கை – பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகள்:**
   சதாரா, சாம்பல்பூர், ஜான்சி, நாக்பூர், பஞ்சாபின் சில பகுதிகள்.

18. **பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது ஏற்படுத்திய தாக்கம்:**
   - இந்திய வேளாண் உற்பத்திப் பொருள்களின் விலை பாதியாகக் குறைந்தது.
   - விவசாயிகள் வரி அதிகம் செலுத்தவேண்டும் என்ற நிலையுடன் இருமடங்காக செலுத்த வேண்டி வந்தது.
   - இந்திய விவசாயிகள் உயிர்பிழைக்க தங்களிடம் உள்ள தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கவேண்டிய நிலை வந்தது.

19. **இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு:**
   - 1916 இல் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கிய இவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தார்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

28. **படிக்கட்டு முறை வேளாண்மை:**
- மலைச்சரிவுகளின் பகுதிகளைச் சமப்படுத்தப்படுகிறது.
- நிலம் நிலையான வேளாண் பகுதிகள் போல பயன்படுத்தப்படுகிறது.
- இது மலைச்சரிவுகளில் மண் அரிப்பைத் தடுக்கிறது.

## பகுதி - III

29. **முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்கள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 1 - வினாத்தாள் 1 - வினா எண் 31.**
30. **இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 2 - வினாத்தாள் 2 - வினா எண் 31.**
31. **பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்த்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 2 - வினாத்தாள் 2 - வினா எண் 43.**
32. **வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகள்:**

**1806 வேலூர் புரட்சி:**

1806 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் தேதி வேலூர் கோட்டையிலிருந்த இந்திய சிப்பாய்கள் ஆங்கிலேயருக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டனர். இதுவே வேலூர் புரட்சி எனப்படும்.

**இந்திய சிப்பாய்களின் மனக்குறைகள்:**
- இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்பட்டது.
- இந்திய வீரர்கள் இழிவாக நடத்தப்பட்டதுடன், பதவி உயர்வு இல்லாமலும் பணியாற்ற வேண்டியிருந்தது.
- சமய அடையாளங்களை பயன்படுத்த தடைசெய்தால் இந்திய சிப்பாய்களுக்கு கோபத்தை உண்டுபண்ணியது.
- நிலக்குத்தகை சட்டத்தில் நிலையற்ற தன்மை இருந்தது.
- 1805 இல் ஏற்பட்ட பஞ்சம் சிப்பாய்களை கடும் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்றது.
- திப்புவின் மகன்களும் அவர் தம் குடும்பத்தினரும் வேலூர் சிறையில் அடைக்கப் பட்டனர்.
- மேலும் சர். ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறைகள் புரட்சி ஏற்பட முக்கிய கூறுகளாக அமைந்தன.

**புரட்சி வெடித்தல்:**
- 1806 ஜூலை 10 ஆம் தேதி அதிகாலை 2.00 மணிக்கு இந்திய சிப்பாய்கள் வேலூர் கோட்டையில் ஆங்கிலேயத் படைத்தளபதிகளை சுட்டுக்கொன்றனர்.
- சுட்டுக்கொல்லப்பட்ட ஆங்கில தளபதிகள் கர்னல் போன்கோர்ட், கர்னல் மீக்காரஸ்.
- ஆற்காட்டின் குதிரைப்படைத் தளபதி கர்னல் ஜில்லஸ்பி தனது படையின் கேப்டன் யங்குடன் கோட்டையை அடைந்தார்.
- இதற்கிடையே ஃபதேக் ஹைதரை மன்னராக அறிவித்து புரட்சிக்காரர்கள் திப்புவின் கொடியை வேலூர் கோட்டையில் ஏற்றினர்.
- கர்னல் ஜில்லஸ்பி கேப்டன் யங்கின் உதவியுடன் போர் விதிமுறை எதையும் கடைப்பிடிக்காமல் தாக்குதல் நடத்தினார்.

**புரட்சி அடக்கப்படுதல்:**
- எனினும் 1806 வேலூர் புரட்சி கம்பெனி படையால் அடக்கப்பட்டது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| கரிசல் மண் | ஈரமாகவும் சேறாகவும் இருக்கும். உருவாகுதல்: தக்காண பீடபூமியில் உள்ள பசால்ட் பாறைகளிலிருந்து உருவாகிறது. டைட்டானியம், இரும்பு தாதுக்கள் கொண்டது. | மகாராஷ்டிரம் – மாளவப் பீடபூமி – கத்தியவார் தீபகற்பம். | பருத்தி, தினை, எண்ணெய், வித்துக்கள், புகையிலை. |
| செம்மண் | உருவாகுதல்: பழமையான படிகப் பாறைகளான கிரானைட், நைஸ் பாறைகள் சிதைவுறுதலில் உருவானது. | தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், தக்காண கிழக்கு பகுதி. | நெல், கரும்பு, பருப்பு வகைகள். |
| சரளை மண் | உருவாகுதல்: வெப்பம் மற்றும் குளிர்வுகளின் அடுத்தடுத்த மாற்றத்தால் உருவானது. | அசாம் மலைப் பகுதி, கர்நாடகா, மேற்குத் தொடர்ச்சி மலை, கேரளா மலைப்பகுதிகள். | காபி, ரப்பர், முந்திரி, மரவள்ளிக் கிழங்கு. |
| காடு மற்றும் மலை மண் | உருவாகுதல்: பனிமழை – வெப்பநிலை மாறுபாட்டால் உருவானது. | ஜம்மு காஷ்மீர், இமாச்சல், உத்திரகாண்ட். | காபி, தேயிலை, நெல், மக்காச்சோளம், உருளை, பார்லி. |

36. **தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை:**

**முதன்மைத் தோட்டப் பயிர்கள்:**

தேயிலை, காபி, இரப்பர், முந்திரி மற்றும் சின்கோனா ஆகியன மாநிலத்தின் முக்கிய தோட்டப்பயிர்களாகும்.

**தேயிலை:**

- இந்தியாவில் அசாம் மாநிலத்திற்கு அடித்தபடியாக தமிழ்நாடு தேயிலை உற்பத்தியில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது.
- நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.

**காப்பி:**

- மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் காபி பயிரிடப்படுகின்றது.
- நீலகிரி மற்றும் ஏற்காடு மலைச்சரிவு, திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்ட மலைச்சரிவுகளில் காபி பயிரிடப்படுகின்றது.
- காபி உற்பத்தியில் தமிழ்நாடு கர்நாடக மாநிலத்திற்கு அடுத்து இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

**இரப்பர்:**

- இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகம் காணப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலையின் சரிவுகளில் அதிகம் காணப்படுகிறது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

1. **வருமான வரி:**
   - வருமான தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுவது.
   - இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக் கூடியது.
2. **நிறுவன வரி:**
   - நிறுவன வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுவது.
   - இந்த வரி வெளிநாட்டு நிறுவனங்களின் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது.

**மறைமுக வரிகள்:**

ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது மறைமுகவரி எனப்படும்.

1. **முத்திரைத்தாள் வரி:**
   அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு, சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவது.
2. **பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST):**
   நுகர்வோர் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கும்போது விதிக்கப்படுவது.

41. **காலக்கோடு: 1910 - 1940:**




Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

42. **(i) வேதாரண்யம் (ii) ஜான்சி (iii) மதராஸ் (iv) ஜாலியன்வாலாபாக் (v) பம்பாய்**




**பகுதி - IV**

43. அ) **தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பு:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 5 - வினாத்தாள் 5 - வினா எண் 43. (அல்லது)**

ஆ) **காந்தியடிகளின் சட்ட மறுப்பு இயக்கம்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 3 - வினாத்தாள் 3 - வினா எண் 43 (ii)**

44.







Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

வினாத்தாள் 9

# அரசு வினாத்தாள் - மே 2022

வகுப்பு: X

## சமூக அறிவியல்

கால அளவு: 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. **சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?**
அ) T.M. நாயர் ஆ) P. ரங்கையா இ) G. சுப்பிரமணியம் ஈ) G.A.நடேசன்

2. **தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை உப்பு சத்தியாகிரக யாத்திரையை மேற்கொண்டவர் யார்?**
அ) சி.ஆர். தாஸ் ஆ) மோதிலால் நேரு இ) சி. ராஜாஜி ஈ) M.N. ராய்

3. **''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' எனக் கூறியவர் யார்?**
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மா சேதுங்

4. **வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?**
அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10 இ) 1806 ஜூலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10

5. **சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.**
i) **பாளையக்காரர் முறை காகதீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.**
ii) **கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும் செவலை 1764-இல் மீண்டும் கைப்பற்றினார்.**
iii) **கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால், யூசுப் கான், துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764-இல் தூக்கிலிடப்பட்டார்.**
iv) **ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.**
அ) (i), (ii) மற்றும் (iv) ஆ) (i), (ii) மற்றும் (iii)
இ) (iii) மற்றும் (iv) மட்டும் ஈ) (i) மற்றும் (iv) மட்டும்

6. **பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.**
அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண்

7. **மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது**
அ) சேமிப்பு மின்கலன்கள் ஆ) எஃகு தயாரிப்பு
இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு

8. **கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?**
அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை இ) போர்காட் ஈ) அச்சன்கோவில்

9. **.................. ''தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம்'' என்றழைக்கப்படுகிறது.**
அ) சென்னை ஆ) திருச்சி இ) சேலம் ஈ) கரூர்

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## பகுதி - III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10×5=50**
**ii) 42வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:
    (i) 1913 ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ------ உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
    (ii) ------ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது.
    (iii) மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம் ------
    (iv) இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இடைப்பட்ட நாடு ------ ஆகும்.
    (v) ------ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதிக்கவும்.
31. பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்த்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
32. அ) வேறுபடுத்துக.
    i) வானிலை மற்றும் காலநிலை
    ii) வண்டல் மண் மற்றும் கரிசல் மண்
    ஆ) காரணம் கூறுக: இமயமலைகள் ‘மடிப்பு மலைகள்’ என அழைக்கப்படுகின்றன.
33. அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தம் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
34. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.
35. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
36. இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் யாவை?
37. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.
39. உலகமயமாமக்கலின் நேர்மறைத் தாக்கம் மற்றும் எதிர்மறைத் தாக்கம் பற்றி எழுதுக.
40. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
    1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    (i) தில்லி (ii) குவாலியர் (iii) ஜான்சி (iv) பனாரஸ் (v) பாரக்பூர்

## பகுதி - IV

**குறிப்பு: i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2×8=16**

43. அ) i) பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.
    ii) ஒத்துழையாமை இயக்க திட்டத்தின் கூறுகளை எழுதுக. **(அல்லது)**
    ஆ) பெண்கள் இயக்கங்கள் குறித்து விவரிக்கவும்.
44. **அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
    (i) பாக் நீர்சந்தி (ii) கங்கை (iii) மேற்கு தொடர்ச்சி மலை (iv) வண்டல் மண் பகுதி ஒன்று (v) காரகோரம் (vi) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை (vii) நெல் விளையும் பகுதி ஒன்று (viii) மலைக்காடுகள்

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

- இத்தாக்குதலில் போர் கப்பல்களும், போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.
- இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர் பிரகடனம் செய்தது.

20. **இலட்சத்தீவுக் கூட்டங்கள்:**
- இந்தியாவின் மேற்குப் பகுதியில் இலட்சக்கணக்கான தீவுகள் கொண்டதால் இப்பெயர் வந்தது.
- முருகைப் பாறைகளால் ஆனது.
- தலைநகரம் கவுரத்தி. 32 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது.

21. **தமிழ்நாட்டின் வேளாண் பருவக்காலங்கள்:**

| **பருவம்** | **விதைக்கும் காலம்** |
|---|---|
| சொர்ணவாரி (சித்திரை பட்டம்) | ஏப்ரல் - மே |
| சம்பா (ஆடிப்பட்டம்) | ஜூலை - ஆகஸ்டு |
| நவரை | நவம்பர் - டிசம்பர் |

22. **இந்தியாவில் அதிக மழைப்பெறும் பகுதிகள்:**
- அசாம்
- மேற்குக் கடற்கரை
- மேகாலயாவின் தென்பகுதி
- திரிபுரா
- நாகலாந்து
- அருணாச்சலப் பிரதேசம்

23. **தமிழ்நாட்டின் எல்லைகள்:**
- கிழக்கே - வங்காள விரிகுடா
- மேற்கே - கேரளா
- வடக்கே - ஆந்திரப் பிரதேசம்
- வடமேற்கே - கர்நாடகம்
- தெற்கே - இந்தியப் பெருங்கடல்

24. **உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள்:**
- இந்தியக் குடிமகனாக இருக்கவேண்டும்.
- உயர்நீதிமன்ற நீதிபதியாக 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருக்கவேண்டும்.
- 10 ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி இருக்க வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்புமிக்க சட்டவல்லுநராக இருத்தல் வேண்டும்.

25. **சார்க் உறுப்பு நாடுகள்:**
- ஆப்கானிஸ்தான்
- வங்காளதேசம்
- பூடான்
- இந்தியா
- நேபாளம்
- மாலத்தீவு
- பாகிஸ்தான்
- இலங்கை

26. **GDP யின் முக்கியத்துவம்:**
- நாட்டின் பொருளாதார நலன் மற்றும் மக்களின் வாங்கும் திறன் மதிப்பீடு செய்ய உதவுகிறது.
- திட்டமிடுதலுக்கு வழிகாட்டியாகப் பயன்படுகிறது.
- உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்யப் பயன்படுகிறது.
- பொதுத்துறை நிறுவனங்கள் பற்றி அறியப் பயன்படுகிறது.
- பணவீக்கம் - பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

27. **தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்கள்:**
- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்.
- ஆரம்பக்கல்வி தேசிய ஊட்டச்சத்து திட்டம்.
- ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்.
- பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்.
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்திட்டம்.
- மதிய உணவுத்திட்டம்.

28. **நிறுவன வரி:**
- தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.
- வெளிநாட்டு நிறுவனங்கள் பெறும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்றது.

**பகுதி - III**

29. **நிரப்புக:**
(i) இலண்டன் (ii) செம்மண் (iii) சூரிய ஆற்றல் (iv) நேபாளம் (v) எடை குறைவு

30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்கள்:
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் - 1 - வினாத்தாள் 1 - வினா எண் 31.**

31. **பெண்களின் மேம்பாடு - 19 ஆம் நூற்றாண்டு சீர்த்திருத்தவாதிகள் - பணிகள்:**

**இராஜாராம் மோகன்ராய்:**
- உடன்கட்டை ஏறுதல் (சதி), பெண்ணடிமைத்தனம், குழந்தைத் திருமணம், பலதாரமணம் ஆகியவற்றை எதிர்த்தார்.
- விதவைப் பெண்கள் மறுமணத்தை ஆதரித்தார்.

**ஈஸ்வர்சந்திர வித்யாசாகர்:**
- விதவைகளை எரிப்பதும், விதவை மறுமணத்தை தடை செய்வதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு மறை நூல்களிலிருந்தே சான்றுகளை முன் வைத்தார்.
- பெண் கல்வியை மேம்படுத்த பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார்.
- 1856 இல் மறுமணச் சீர்திருத்தச் சட்டம் (விதவைகள் மறுமணச் சட்டம்) இயற்றப்படக் காரணமாக அமைந்தது.

**M.G. ரானடே:**
- சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம்.

**தயானந்த சரஸ்வதி:**
- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார்.
- விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.

**ஜோதிபா பூலே:**
- குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார்.
- விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
- பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு விடுதிகளையும் விதவைகளுக்கு காப்பகங்களையும் உருவாக்கினார்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 2. | அரசாங்கத்தால் கூட இந்த உரிமையைச் சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| 3. | நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| 4. | சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| 5. | இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன. | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |

34. **இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்கள்:**

**1905 – வங்கப் பிரிவினை:**

- கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை முதல்காரணம்.
- நிர்வாகக் காரணங்களுக்காக என்று கூறி வங்கத்தை இரண்டாகப் பிரித்தது.

**1928 – நேரு அறிக்கை:**

- நேரு அறிக்கையின்படி மத்திய சட்டப்பேரவையில் இடஒதுக்கீடு வழங்க சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று கூறி 14 அம்ச தீர்மானத்தை ஜின்னா கொண்டு வந்தார்.
- தீர்மானம் நிராகரிக்கப்படவே முஸ்லீம்களுக்கு தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தினார்.

**சிம்லா மாநாடு:**

- இடைக்கால அரசில் இந்து – முஸ்லீம்களுக்கு சமஎண்ணிக்கை இடஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்யப்பட்டது.
- இருப்பினும் முக்கிய விஷயங்களில் வீட்டோ அதிகாரங்கள் பெறவேண்டும் என்று ஜின்னா கோரினார்.

**அமைச்சரவை தூதுக்குழு:**

- பிரிட்டன் பிரதமர் கிளமண்ட் அட்லி தலைமையிலான குழு பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கையை நிராகரித்தது.
- தகவல்தொடர்பு மற்றும் வெளியுறவுத்துறையுடன் கூடிய மத்திய அரசை நிறுவ வகை செய்தது.
- இதில் முஸ்லீம் பெரும்பான்மை மாநிலங்கள், முஸ்லீம் பெரும்பான்மை இல்லாத மாநிலங்கள் எனப் பிரிக்கப்பட்டன.
- இந்த தற்காலிக முடிவை நிரந்தரமாக்க முஸ்லீம் லீக் விரும்பியது.

**நேரடி நடவடிக்கை நாள்:**

- காங்கிரஸ் ஒரு முஸ்லீம் உறுப்பினரை நியமிக்க, காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்கிற்கும் கருத்து வேறுபாடுகள் நிலவின.
- முஸ்லீம்களுக்கு நாங்கள் மட்டுமே பிரதிநிதி என முஸ்லீம் லீக் 1946 ஆகஸ்ட் 16 ஆம் தேதியை நேரடி நடவடிக்கை நாளாக அறிவித்தது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**எதிர்மறைத் தாக்கம்:**

- அதிகமான மூலதனமானது நியாயமற்ற ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்தியது.
- அதிகமான வர்த்தகப் பரிமாற்றம் இருப்பதால் சுதந்திரமான உள்நாட்டுக் கொள்கைகள் இழக்கப்படுகிறது.
- பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும் எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூகச் செலவுகளை அதிகரிக்கும்.
- இயற்கை வளங்கள் அதிகமாக சுரண்டப்படுகிறது.
- சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்க்கப்பட்டன.

40. **கருப்பு பணம் - அதற்கான காரணங்கள்:**

- கருப்பு பணம் என்பது கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணமாகும்.
- வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட கணக்கிடப்படாத பணமே “கருப்புபணம்” என்று அழைக்கப்படுகிறது.

**கருப்பு பணத்திற்கான காரணங்கள்:**

- பண்டங்கள் பற்றாக்குறை
- உரிமம் பெறும் முறை
- தொழில்துறையின் பங்கு
- கடத்தல்
- வரியின் அமைப்பு

41. **காலக்கோடு: 1920 - 1940**




1920 - ஒத்துழையாமை இயக்கம்

1930 - முதல் வட்ட மேசை மாநாடு

1931 - இரண்டாம் வட்ட மேசை மாநாடு

1935 - இந்திய அரசுச் சட்டம்

1940 - ஆகஸ்ட் நன்கொடை

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

42. **(i) தில்லி (ii) குவாலியர் (iii) ஜான்சி (iv) பனாரஸ் (v) பாரக்பூர்**




**பகுதி - IV**

43. அ) i) **பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு:**

- 1920 ஜனவரி 20 இல் தொடங்கப்பட்டது.
- பன்னாட்டுச் சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.
- சவால்கள் நிறைந்த பன்னாட்டுச் சங்கம் அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டது.
- பன்னாட்டுச் சங்கத்தின் விதிகளை உருவாக்கியதில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆலோசனை மேலோங்கியிருந்தது.

**பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்புகள்:**

- பன்னாட்டுச் சங்கத்தின் செயலகம் ஜெனிவாவில் அமைக்கப்பட்டது.
- பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு.
- பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தது.
- பன்னாட்டு நீதிமன்றம் தி ஹேக்கில் அமைக்கப்பட்டு 15 நீதிபதிகளைக் கொண்டிருந்தது.
- பன்னாட்டு தொழிலாளர் அமைப்பும் நிறுவப்பட்டது.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

44.




★★★

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# அரசு வினாத்தாள் - ஆகஸ்ட் 2022

வினாத்தாள் 10

வகுப்பு: X

## சமூக அறிவியல்

கால அளவு: 3 மணி நேரம் — மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின் இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்
2. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
   அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
   இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர்
3. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் தன் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
   அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
   இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்
4. 1709 இல் தரங்கம்பாடியில் ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவியவர் ------.
   அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ்
   இ) சீகன் பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்
5. ------ ஆம் ஆண்டில் லொக்கார்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
   அ) 1927 ஆ) 1925 இ) 1825 ஈ) 1952
6. பழவேற்காடு ஏரி ------ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
   அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
   இ) ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
7. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ------ ஆகும்.
   அ) சம மழைக் கோடுகள் ஆ) சம அழுத்தக் கோடுகள்
   இ) சம வெப்ப கோடுகள் ஈ) அட்சக் கோடு
8. தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்றழைக்கப்படுவது?
   அ) திருவாரூர் ஆ) தஞ்சாவூர் இ) சேலம் ஈ) திருச்சி
9. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
   அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை இ) போர் காட் ஈ) அச்சன் கோவில்
10. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு
    அ) வரைபடவியல் ஆ) மக்களியல் இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்
11. கீழ்க்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?
    அ) குடியரசு, ஜனநாயக, சமயச்சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை
    ஆ) இறையாண்மை, சமதர்ம சமயச்சார்பற்ற குடியரசு, ஜனநாயக

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

32. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான 'சட்டமறுப்பு இயக்கம்' குறித்து விரிவாக ஆராயவும்.
33. நகரமயமாக்கல் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரிக்கவும்.
35. வேறுபடுத்துக.
அ) i) கடல் மீன்பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன்பிடித்தல்.
ii) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.
ஆ) காரணம் கூறுக: வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு
36. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
37. அண்டை நாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் ஏதேனும் இரு கொள்கைகளை விவரிக்கவும்.
38. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?
39. மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) – ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரிக்கவும்.
40. பொது விநியோக முறையை விவரிக்கவும்.
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
(i) பம்பாய் (ii) தண்டி (iii) மீரட் (iv) சௌரி சௌரா (v) கல்கத்தா

## பகுதி - IV

**குறிப்பு: i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2×8=16**

43. அ) சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக. **(அல்லது)**
ஆ) 1905 – ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?
44. **அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.**
(i) எவரெஸ்ட் சிகரம் (ii) காம்பே வளைகுடா (iii) தார் பாலைவனம் (iv) வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை (v) தேயிலை விளையும் பகுதி ஒன்று (vi) நிலக்கரி சுரங்கம் அமைந்தள்ள இடம் ஒன்று (vii) கொச்சி (viii) மலபார் கடற்கரை **(அல்லது)**
**ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
(i) கன்னியாகுமரி (ii) காப்பி விளையும் பகுதி ஒன்று (iii) வைகை அணை (iv) வாகனத் தொழிலகங்கள் (ஒன்று) (v) சேர்வராயன் மலை (vi) எண்ணூர் துறைமுகம் (vii) மாங்குரோவ் காடுகள் (viii) தஞ்சாவூர்

★★★

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

20. **இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம்:**
- இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82° 30' கிழக்கு தீர்க்கரேகையின் தல நேரம் இந்திய திட்ட நேரமாக உள்ளது.
- இத்தீர்க்கரேகை உத்திரப்பிரதேச மிர்சாபூர் (பிராக்யாராஜ் - அலகாபாத்) வழியாகச் செல்கிறது.
- இந்திய திட்டநேரமானது கிரீன்வீச் சராசரி நேரத்தைவிட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

21. **'வேளாண்மை':**
- வேளாண்மை என்பது குறிப்பிட்ட பயிர்களை உற்பத்தி செய்வது.
- கால்நடை வளர்த்தல் - மக்களுக்கான உணவு- கால்நடை தீவனம் - நார் மற்றும் இதரபொருட்களை அனைவருக்கும் வழங்குவது.
- வேளாண்மை 'இந்தியாவின் முதுகெலும்பு' என்று அழைக்கப்படுகிறது.

22. **தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்கள்:**
- காரையாறு - சேர்வலாறு
- சிற்றாறு - இராமநதி ஆறு
- மணிமுத்தாறு - பச்சையாறு
- கடனாநதி

23. **தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்கள்:**
- மேட்டூர் அணை
- வைகை அணை
- பவானிசாகர் அணை
- முல்லைப் பெரியார் அணை

24. **இந்தியாவின் செம்மொழிகள்:**
- தமிழ்
- தெலுங்கு
- மலையாளம்
- சமஸ்கிருதம்
- கன்னடம்
- ஒடியா

25. **உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள்:**
- உணவு கிடைத்தல் - விரும்பிய அளவில் உணவு இருத்தல்.
- உணவுக்கான அணுகல் - முதன்மையான வாங்கும் திறன்.
- உணவினை உறிஞ்சுதல் - உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்தும் திறன்.

26. **பண்டங்கள் மற்றும் பணிகள் வரி:**
- பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) என்பது நுகர்வோர்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கும்பொழுது விதிக்கப்படுகின்ற வரியாகும்.
- இது மறைமுக வரிகளில் ஒன்றாகும்.
- இந்திய பாரளுமன்றத்தில் 2017, மார்ச் 29 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.
- 2017, ஜூலை 1 முதல் செயல்பட்டு வருகிறது.
- இதன் குறிக்கோள் ஒரு நாடு - ஒரு அங்காடி - ஒரு வரி என்பது.

27. **தொழில் துறைத் தொகுப்பு:**
ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள
- பொதுவான சந்தைகள்
- தொழில்நுட்பங்கள்
- திறன்களுக்கான தேவை போன்ற நிறுவனங்களின் தொகுப்பாகும்.
- தொகுப்புகளின் முக்கிய அம்சம் நிறுவனங்களிடையே ஒரு பரஸ்பரத் தொடர்பு இருக்கவேண்டும்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

28. **பஞ்சசீல கொள்கை: (ஏதேனும் 4)**

- ஒவ்வொரு நாட்டின் எல்லைகள் – இறையாண்மை பரஸ்பரம் மதித்தல்.
- இரு நாடுகள் பரஸ்பரம் ஆக்கிரமிப்பின்மை.
- உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை.
- தங்கள் நாட்டு நலனுக்காக ஒத்துழைத்தல்.
- அமைதியாக இருத்தல்.

**பகுதி - III**

29. **நிரப்புக:**

(i) கயத்தாறு (ii) அருணா ஆசப் அலி (iii) கோயம்புத்தூர் பீடபூமி (iv) தென்பெண்ணை ஆறு (v) தொழிற்துறை

30. **வேலூரில் 1806 – இல் வெடித்த புரட்சியின் கூறுகள்:**
**பார்க்க: அரசு வினாத்தாள் செப்டம்பர் 2021 – வினாத்தாள் 8 – வினா எண் 31.**

31. **இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 2 – வினாத்தாள் 2 – வினா எண் 31.**

32. **சட்டமறுப்பு இயக்கம்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 3 – வினாத்தாள் 3 – வினா எண் 43 (ii).**

33. **நகரமயமாக்கல் மற்றும் அதன் சிக்கல்கள் (தாக்கங்கள்):**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 5 – வினாத்தாள் 5 – வினா எண் 35.**

34. **இமயமலையின் உட்பிரிவுகள் மற்றும் முக்கியத்துவம்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 1 – வினாத்தாள் 1 – வினா எண் 34.**

35. அ) i) **கடல் மீன்பிடித்தல் – உள்நாட்டு மீன்பிடித்தல்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 5 – வினாத்தாள் 5 – வினா எண் 30 (ii).**

ii) **மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 1 – வினாத்தாள் 1 – வினா எண் 30 (i).**

ஆ) **காரணம்: வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு:**

- இந்தியாவில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பும், நாட்டின் மொத்த வருமானத்தில் 25 சதவீதமும் இந்தியாவில் வேளாண்மை அளிக்கிறது.
- வேளாண்மை சார்ந்த உப தொழிலில் பெரும்பாலான மக்கள் ஈடுபடுவதால் வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு என அழைக்கப்படுகிறது.

36. **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்:**
**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் – 1 – வினாத்தாள் 1 – வினா எண் 37.**

37. **இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கை:**

நமது வெளியுறவுக் கொள்கை அடிப்படையானது சர்வதேச உறவுகளில் ஒன்றையொன்று சார்ந்திருப்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது.

- ஆயுதக் குறைப்பு செய்தல்.
- தேசிய நலன் பேணுதல்.
- உலக அமைதியைப் பெறுதல்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

41. **காலக்கோடு: 1930 - 1950**




1930 - உப்புச் சத்தியாக்கிரகம்

1935 - இந்திய அரசுச் சட்டம்

1940 - ஆகஸ்ட் நன்கொடை

1949 - இந்தியா விடுதலை பெறுதல்

1950 - இந்தியா குடியரசு பெறுதல்

42. **(i) பம்பாய் (ii) தண்டி (iii) மீரட் (iv) சௌரி சௌரா (v) கல்கத்தா**




**பகுதி - IV**

43. அ) **சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமான விளைவுகள்:**

**பார்க்க: PTA மாதிரி வினாத்தாள் 3 - வினாத்தாள் 3 - வினா எண் 43 (i). (அல்லது)**

ஆ) **1905 - வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் நடந்து கொண்ட விதம்:**

**வங்கப் பிரிவினை:**

- 1905 ஆம் ஆண்டு வங்கப்பிரிவினை இந்தியாவில் மிகவும் அதிருப்தியை ஏற்படுத்திய சம்பவம் ஆகும்.

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com

- இதனை கொண்டு வந்தவர் கர்சன் பிரபு.
- வங்கப் பிரிவினை மக்களின் விரைவான போராட்டத்துக்கு வழிவகுத்தது.

**பிரிவினை இயக்கம்:**

- வங்காளிகளின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப் பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது.
- கர்சன் பிரபுவின் பிரிவினைச் செயல் வங்காள மக்களை ஒன்றிணைத்தது.

**பிரிவினைக்கு எதிரான இயக்கம்:**

- மித தேசியவாதிகள் – தீவிர தேசியவாதிகள் என இரு பிரிவு தலைவர்களும் எதிர்த்தனர்.
- வங்கப் பிரிவனையை துக்கநாளாகக் கருதினர்.
- ஆயிரக்கணக்கான மக்கள் கங்கை நதியில் புனித நீராடி வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றனர்.
- அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது என முடிவு செய்தனர்.
- சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது என்று உறுதிமொழி எடுத்தனர்.

**வங்காளத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும்:**

- மிதவாதப் போக்கு, ஆக்கபூர்வ சுதேசி, தீவிர தேசியவாதம், புரட்சிகர தேசியவாதம் என நான்கு போக்குகளை புறக்கணிப்பு இயக்கம் கடைப்பிடித்தது.
- பிரிவினைக்கு எதிராக வேண்டுகோள்கள் - செய்திப் பிரச்சாரங்கள் - மனுக்கள் - பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் போராட்டங்கள் நடத்தினார்கள்.

44.







★★★

Kindly send me your district Questions & keys to email id - Padasalai.net@gmail.com